தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 20, விய – திருவள்ளுவர் ஆண்டு 2038

2007 ஏப்ரல் 3, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை."

பல தொழில்களைச் செய்து சுழன்று கொண்டிருக்கும் இந்த உலகம், ஏர்த் தொழிலின் பின்னேதான் சுற்ற வேண்டியிருக்கிறது. எனவே, எவ்வளவுதான் துன்பம் இருப்பினும் உழவுத் தொழிலே சிறந்தது.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. தகவல் கோரல்

(அ) வேலூர் மாவட்டம், மோர்தானா அணை – பாசனத்திற்காகத் திறத்தல்

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன? சொல்லுங்கள். சொல்லுங்கள், திரு. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேலூர் மாவட்டத்தில், மோர்தானா அணை திறக்கப்படாமல் இருந்துகொண்டிருக்கிற காரணத்தினாலே, விவசாயிகள் இப்போது நீரின்றி மிகவும் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், உடனடியாக மோர்தானா அணையைத் திறப்பதற்கு ஆணையிடுவாரா?

வேளாண்மைத் துறைமீது விவாதம் நடந்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், விவசாயிகளுடைய வயிற்றில் பால் வார்ப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) திரு. பாண்டுரங்கன், நான் சொல்லிவிடுகிறேன். மோர்தானா அணையைத் திறக்க வேண்டுமென்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் இப்பொழுது கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட, அதைத் திறக்க, நாளைக்கு என்னுடைய மானியக் கோரிக்கையின்போது ஓர் உண்ணாவிரதம் இருக்க வேண்டுமென்று அவருடைய கட்சிக்காரர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதிலே ஒன்றைத் தெரிவித்திருக்கிறார்கள். மோர்தானா அணையை என்று திறப்பது என்று இதுவரையிலே எந்தவிதமான rules-ம் போடப்படவில்லை. . ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் என்ன சொல்லியிருக்கிறார் என்றால், வழக்கமாக டிசம்பர் 16 ஆம் தேதிதான் திறப்பார்கள்; ஆனால், இந்த ஆண்டு திறக்கவில்லை என்றார்கள்.

Rules ஒன்றும் கிடையாது; 16 ஆம் தேதி என்கிறார்கள். ஆனால், எப்படி அன்று திறந்திருக்கிறார்கள் என்றால், 2001-லேதான் திறந்தார்கள். திறக்கிறபோது, 18-1-2001-லேதான் திறந்தார்கள். வழக்கமாக டிசம்பரில் அல்ல. 2002-லே திறக்கவேயில்லை. 2003-ல், 10-2-2003-ல் திறந்தார்கள். 2005-ல் மட்டும்தான் 16-12-2005-ல் திறந்து இருக்கிறார்கள். ஆகையினாலே, எப்போது திறப்பது என்பதல்ல; எப்போது மக்களுக்குத் தேவையோ, அப்போது திறப்பதிலே எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது. ஆகையினாலே, நியாயமாக அந்தத் தொகுதியில் மோர்தானா அணையைப் பயன்படுத்துகிற கோரிக்கையை நான் எழுப்பவேண்டும்; குடியாத்தம் எம்.எல்.ஏ. எழுப்பவேண்டும்; மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டுரங்கன் அவர்கள் எழுப்ப வேண்டும்; ஆனால், பொதுமக்களிடமிருந்து யாரும் கேட்கவில்லை. உண்ணாவிரதம் இருக்கப் போகிறார்கள் என்ற செய்தி நேற்று வந்த பிறகுதான், நானே கலெக்டரைக் கூப்பிட்டுக் கேட்டேன். எங்கேயாவது இருந்து ஏதாவது representation வந்திருக்கிறதா அல்லது கேட்கலாமா என்று. இருந்தாலும், இப்போது இருக்கிற தண்ணீர் கொஞ்சம்தான்.

2007 ஏப்ரல் 3] [திரு. துரைமுருகன்]

போனமுறை அவர் சொன்னார்; நான் திறக்கிற அன்று, துரைமுருகன் உட்கார்ந்து -"காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்ததுபோல" என்று சொல்லி — திறந்துவிட்டுப் போனார். நான் நினைத்துக் கொண்டிருந்தேன், ஒரு எதிர்க்கட்சித் துணைத் தலைவருடைய வேண்டுகோளை ஏற்றுத்தான் திறந்தார் என்று. ஆனால், இன்றைக்கு நான் தெரிவிக்கிறேன்; அவர்கள் காட்டாத பெருந்தன்மையை நான் காட்டுகிறேன். உங்களுக்காக அல்ல; விவசாயிகளுக்காக. எனவே, அந்த முறையில், இன்று மாலை 5 மணிக்கு மோர்தானா அணை திறக்கப்படும் என்ற செய்தியை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (கூச்சல்-குழப்பம்) (குறுக்கீடுகள்)

2. விதி 110–ன்கீழ் அறிக்கை

பத்தாம் வகுப்பு சமூக அறிவியல் பாடத் தேர்வைப் புதிய வினாத் தாளுடன் 11-4-2007 அன்று நடத்துதல் – மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். (குறுக்கீடுகள்) விதி 110 Sir, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) அப்புறம் எடுக்கலாம். உட்காருங்கள். முடிக்கட்டும். அவர் பேசி முடிக்கட்டும்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) தேனி மாவட்டத்தில், அல்லி நகரம் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் உள்ள அனைவருக்கும் கல்வி இயக்க வட்டார வள மைய அலுவலக அறை, பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு வினாத்தாட்கள் கட்டுக் காப்பகமாக செயல்பட்டு வந்தது. இந்த அறையின் பின்புறத்தில் ஜன்னல் கம்பிகள் உடைக்கப்பட்டு இருந்ததாக, மேல்நிலைப் பொதுத் தேர்வு விடைத்தாள் திருத்தும் மையத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த தேனி முதன்மைக் கல்வி அலுவலருக்கு ... (குறுக்கீடு)